**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.213** **நாள் : 11.08.2025**

**இராயபுரம் (மண்டலம்-5) மற்றும் திரு.வி.க.நகர் (மண்டலம்-6) மண்டலங்களில் திடக்கழிவுகளை அகற்றுவதற்காக இன்று (11.08.2025) இரவு 10 மணி முதல் தீவிரத் தூய்மைப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் (மண்டலம்-5) மற்றும் திரு.வி.க.நகர் (மண்டலம்-6) மண்டலங்களில் தனியார் நிறுவனத்தின் மூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த 16.7.2025 முதல் 10.8.2025 வரை மண்டலம் 5 மற்றும் 6ல் இருந்து 23961.22 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த இரண்டு மண்டலங்களில் உள்ள திடக்கழிவுகளை அகற்றுவதற்காக இன்று (11.08.2025) இரவு 10 மணி முதல் தீவிரத் தூய்மைப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த தீவிரத் தூய்மைப் பணியில் தேவையான வாகனங்கள் மற்றும் உபகரணங்களுடன் 1000 தூய்மைப் பணியாளர்கள் கூடுதலாக ஈடுபடுத்தப்பட்டு, தூய்மைப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பணிகளுக்காக சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உரிய அலுவலர்கள் வார்டு வாரியாக நியமனம் செய்யப்பட்டு, அவர்களின் கண்காணிப்பில் இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**